## கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 8604 / 2013 / எம்சி. 8 நாள் : 17.09.2013**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் **19.09.2013** வியாழக்கிழமை பிற்பகல் **3.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

உண்மை நகல்

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - செப்டம்பர் 2013

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | பணியமைப்பு - நியூ டெல்லியில் 26.08.2013 மற்றும் 27.08.2013 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற Innovations in Urban Governance கூட்டத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பங்கு பெற்றது - மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டுதல் - தொடர்பாக. |
| 2 | வடக்கு மண்டலம் - வார்டு எண். 43 – உருமாண்டம்பாளைம் பகுதியில் மீண்டும் இரயில் நிறுத்தம் அமைக்க தேவையான வசதிகளை செய்தல் - செலவீனத்தை மாநகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ளுதல் - மாமன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 3 | பொறியியல் பிரிவு – வெள்ளலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சாரதா மில் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிலிருந்து நஞ்சுண்டாபுரம் பகுதிக்கு செல்லும் குடிநீர் குழாயிலிருந்து குடிநீர் வழங்குதல் இதற்கு ஏற்படும் செலவினத்தையும், குடிநீர் கட்டணத்தையும் வெள்ளலூர் பேரூராட்சியிடமிருந்து செலுத்த கோருதல் – மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பு |
| 4 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 38 – செங்காளியப்பன் நகர் க.ச. எண் 333/1 ல் சாலை விஸ்தரிப்பு செய்ய தனியார் நிலம் ஆர்ஜிதம் செய்ய மனையிட உரிமையாளருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - புதிதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகள் - ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 49 சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல் - 49 சிப்பங்களாக பிரித்தல் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 80 – எம்.என்.ஜி. வீதியில் 10 கடைகள் கட்டுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - 6 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி கோரியது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை – 5, 6, மற்றும் 7-வது வார்டுகளில் சாக்கடைப் பணியாளர்களின் பணிகள் - தனியார் நிறுவனம் மூலம் மேற்கொண்டது 31.07.2013-உடன் முடிவடைதல் - மேற்படி பணிக்காலம் 3 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தல் மற்றும் அதற்கான செலவினம் ஏற்றல் – மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| 9 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை – 8 மற்றும் 9-வது வார்டுகளில் சாக்கடைப் பணியாளர்களின் பணிகள் - தனியார் நிறுவனம் மூலம் மேற்கொண்டது 31.07.2013-உடன் முடிவடைதல் - மேற்படி பணிக்காலம் 3 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தல் மற்றும் அதற்கான செலவினம் ஏற்றல் மாமன்றத்தின் பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| 10 | பொறியியல் பிரிவு - மாநகராட்சி 20 நகர்நல மையங்களில் ஒப்பந்தம் அடிப்படையில் பணிபுரியும் காவலர்கள், ஆயாக்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களின் ஒப்பந்த காலம் நீட்டித்தல் மற்றும் அதற்கான செலவினம் ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 11 | பொது சுகாதாரம் - சிறப்பு தூய்மைக்குழு- ஒப்பந்த பணியாளர்கள் - ஒப்பந்தம் 12.07.2013 –ம் தேதியன்று முடிவடைந்தது – மீண்டும் 13.07.2013 ம் தேதி முதல் 30.11.2013 வரை நீடிப்பது மற்றும் புதிய ஒப்பந்தம் கோருதல் - மற்றும் அதற்கான செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| 12 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 38 – கருப்பண்ண மனைப்பிரிவில் மாநகராட்சிக்கு சொந்தமான பொது ஒதுக்கீட்டு இடத்தில் மகளிர் மற்றும் சிறுவர் பூங்கா அமைத்தல் பணி – மதிப்பீடு 72.30 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | பொறியியல் பிரிவு - வெள்ளலூர் மாநகராட்சி குப்பைக் கிடங்கில் வடபுறத்தில் சுற்றுச்சுவர் அமைத்தல் - மதிப்பீடு 74.25 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 14 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டல் - வார்டு எண் 37 - இந்துமாநகர் பகுதியில் உள்ள மாநகராட்சி பொது ஒதுக்கீட்டு இடத்தில் பிரத்தியேகமாக மகளிர் பூங்கா மற்றும் உடற்பயிற்சி சாலை அமைத்தல் - சிறுவர் விளையாட்டுத் திடல் அமைத்தல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 20 – கருமலை செட்டிபாளையத்தில் புதிய சமுதாயக் கூடம் கட்டிடம் கட்டுதல் - மதிப்பீடு 51.00 இலட்சம் - மாமன்ற நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | பொறியியல் பிரிவு - புதிதாக இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம், பகுதிகளுக்கு குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்தல் மற்றும் பில்லூர் 2வது திட்டம் மற்றும் ஆழியார் குடிநீர் திட்டத்துடன் குழாய் அமைத்து இணைத்தல் பணி - தமிழ்நாடு குடிநீர் முதலீட்டுக் கழகத்தின் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல் மற்றும் அதற்கான தொகை வழங்குதல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| 17 | பொறியியல் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை திட்டம் - குப்பையில் இருந்து மின்சாரம் தயாரித்தல் - திட்ட அறிக்கை தயாரித்தல் - நிறுவனம் தேர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடாபாக |
| 18 | வருவாய் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி - தொழில்வரி உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 19 | பொறியியல் பிரிவு - காந்திபுரம் மத்திய மற்றும் நகர பேருந்து நிலையங்கள் வடிவமைத்தல் - திள் எஸ்.பி.எஸ். அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கையை ரத்து செய்தல் - மீண்டும் விருப்ப கேட்பு அறிக்கை கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | பொது சுகாதாரப் பிரிவு - 6 நகர்நல மையங்களில் செயல்பட்டு வரும் என்.சி.டி. மையங்களுக்குத் தேவையான மருந்துப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கி வழங்குதல் - தொற்றாநோய் சிகிச்சை மையங்களுக்கு தேவையான பொருட்கள் வாங்க ஏற்படும் ஆரம்ப செலவினம் ரூபாய் 8.05 லட்சத்திற்கும் மற்றும் மாதாமாதம் ஏற்படும் தொடர் செலவினங்கள் ரூபாய் 5.50 லட்சத்திற்கும் அரசிடமிருந்து மறு உத்தரவு வரும்வரை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 21 | நகரமைப்புப் பிரிவு - கட்டிட இடமான பொருட்களை அப்புறப்படுத்தவும், அப்பொருட்களை கொண்டு கட்டுமான உபயோக பொருட்களாக மாற்ற தனியார் பங்களிப்புடன் உக்கடம் கழிவுநீர் பண்ணை இடத்தில் இத்திட்டம் நிறைவேற்ற முன்மொழிவு கோரும் அறிவிப்பு கோருதல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| 22 | பொறியியல் பிரிவு - ஆணையாளர் அவர்களின் ஆய்வுப் பணிக்கு புதிய இன்னோவா வாகனம் வாங்கி வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 23 | Jnnurm - சொக்கம்புதுாரில் உள்ள மின் மயானத்தினை காய்கறிச் சந்தை மற்றும் உணவகங்களில் உருவாகும் உணவு கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரித்து இயக்குதல் - அரசின் அனுமதி பெறுவதற்கு பிரேரனை சமா்ப்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ) <u>திருக்குறள்</u>**

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்.

**(குறள் - 1021)**

**<u>விளக்கம்</u>**

சமுதாயத்திற்குத் தம் கடமைகளைச் செய்யாது கைவிரிக்க மாட்டோம் என்ற உறுதியைப் போன்ற பெருமையிலும் மேலான புகழ் வேறில்லை.

**திருவள்ளுவர்**

---

**ஆ) <u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம் எண் 1**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சிதலைவி அம்மா அவர்களால் மாநகராட்சி பகுதிகளில் கொண்டுவரப்பட்ட உணவுத் திட்டமான ‘அம்மா உணவகம்’ நமது கோவை மாநகராட்சியில் 10 இடங்களில் மிகச் சிறப்பாக மக்களுக்கு பிரயோஜனமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அடித்தள மக்கள் பயன்பெறும் வகையில் இதுபோன்ற நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருவதோடு மட்டுமல்லாமல் மாநகராட்சி பகுதியிலே சுத்தமான குடிநீர் கிடைப்பதற்காக ஒவ்வொரு பேருந்து நிலையத்திலும் ‘அம்மா குடிநீர் ’ திட்டத்தினை செயல்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு மாமன்றம் நெஞ்சார்ந்த நன்றியினை சமர்பித்துக் கொள்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 19.09.2013</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

---

**பொருள் எண் 1**

**பொருள்** கோயம்புத்தூர் மாநகராட்சி - நியூ டெல்லியில் 26.08.2013 மற்றும் 27.08.2013 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற Innovations in Urban Governance கூட்டத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பங்கு பெற்றது - மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டுதல் - தொடர்பாக.

**பார்வை** அரசாணை (ஆர்.டி.) எண். 139, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( தேர்தல் ) துறை, நாள். 23.08.2013.

--------------

பார்வையில் காணும் அரசாணையின்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 26.08.2013 மற்றும் 27.08.2013 ஆகிய இரண்டு நாட்கள் வித்யா பவன், நியூ டெல்லியில் நடைபெற்ற Innovations in Urban Governance கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் வணக்கத்திற்குரிய மேயர் மேற்காண் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

மேலும் மேற்படி அரசாணையில், இக்கூட்டத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கலந்து கொண்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதால் மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 109/2011/எம்.சி.6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 186 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 2**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண். 43 – உருமாண்டம்பாளைம் பகுதியில் மீண்டும் இரயில் நிறுத்தம் அமைத்து - இரயிலை நிறுத்தி எடுத்துச் செல்ல தேவையான வசதிகளை செய்து தருதல் - தென்னக இரயில்வே அலுவலகத்தில் இருந்து வந்த கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்தல் - மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பித்தல் - தொடர்பாக.

பார்வை : 1. தலைவர், வெள்ளக்கிணறு பேரூராட்சி அவர்களின் கடிதம் நாள். 16.08.2010
2. மண்டல வணிக மேலாளர், தென்னக இரயில்வே, சேலம் கோட்டம் அவர்களின் கடிதம் எண். SA / C / 210 / T.H/12 நாள். 16.08.2013

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.43-க்குட்பட்ட உருமாண்டம்பாளையம் பகுதியில் இரயில் நிறுத்தம் மீண்டும் அமைத்து இரயிலை நிறுத்தி எடுத்து செல்ல ஷ்ரம்தான் (Shramdhan) திட்டத்தின் கீழ் பரிசீலனையில் உள்ளது என பார்வை (2)ல் காணும் கடிதம் பெறப்பட்டுள்ளது.

ஷ்ரம்தான் (Shramdhan) திட்டத்தின் கீழ் இரயில் நிறுத்தம் அமைக்க அடிப்படை வசதிகளான 100 சதுர அடி (10' x 10') அளவுள்ள ஸ்டேசன் மாஸ்டர் அறை மற்றும் இரயில் நின்று செல்லும் பிளாட்பார்ம் சமன்படுத்துதல், குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதி ஆகியவை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி துறை அல்லது தனியார் வாயிலாக மேற்கொள்ள வேண்டும் ஆகிய நிபந்தனைகளுக்கு ஏற்கனவே பார்வை (1)ல் காணும் கடிதத்தின் மூலம் வெள்ளக்கிணறு பேரூராட்சி தலைவர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உருமாண்டம்பாளையம் பகுதியில் இரயில் நிறுத்தம் அமைக்க தோராய செலவு ரூ.39,85,250/- ஏற்படும் எனவும் மேற்கண்ட செலவீனத்தை கோயம்புத்தூர் மாநகராட்சி ஏற்றுக் கொள்வதற்கான ஒப்புதல் வழங்கிய பின்னர் மீண்டும் இரயில் நிறுத்தம் அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பார்வை (2)ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளை தென்னக இரயில்வே மேற்கொள்ள ஒப்புதலும் இப்பணிகளுக்கான உத்தேச செலவீனம் ரூ.39,85,250/-ஐ கோயம்புத்தூர் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 09961/2013/டி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 187 நாள் 19.09.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 3**

பொருள்: கோவை மாவட்டம்–வெள்ளலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு – கோவை மாநகராட்சிகுட்பட்ட சாரதா மில் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியிலிருந்து நஞ்சுண்டாபுரம் பகுதிக்கு செல்லும் குடிநீர் குழாயிலிருந்து குடிநீர் வழங்க – மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பு

மாண்மிகு வேளாண்மை துறை அமைச்சர், தலைமை செயலகம், சென்னை–**09** அவர்கள், வணக்கத்திற்குரியமேயர்,கோவை மாநகராட்சி அவர்களுக்கு முகவரியிட்ட**12.09.2013**ம் தேதிய கடிதத்தில் கோவை மாவட்டம், வெள்ளலூர் பேரூராட்சிக்குட்பட்ட **1**–வது வார்டு நஞ்சுண்டாபுரம் ரோடு, கோல்டன் நகர், வெங்கட்ரமணா நகர், லட்சுமி நாராயணா நகர் மற்றும் நாடார் காலனி பகுதி மக்களின் நீண்ட நாள் குடிநீர் கோரிக்கையினை ஏற்று கோவை மாநகராட்சிக்குட்பட்ட சாரதா மில் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து நஞ்சுண்டாபுரம் பகுதிக்கு வெள்ளலூர் பேரூராட்சிக்குட்பட்ட நாடார் காலனி பகுதி வழியாக செல்லும் குடிநீர் குழாய் இணைப்பில் இருந்து குடிநீர் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இதற்கு ஏற்படும் செலவினத்தையும், குடிநீர் கட்டணத்தையும் வெள்ளலூர் பேரூராட்சி நிதியிலிருந்து செலவிடப்படும் என்பதையும் தெரிவித்து கொள்ளப்பட்டுள்ளது.

வெள்ளலூர் பேரூராட்சி அதற்கான தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. தீர்மான எண். **129/2013** நாள் **11.09.2013.**

எனவே, கோவை மாவட்டம், வெள்ளலூர் பேரூராட்சிக்குட்பட்ட **1** வது வார்டு நஞ்சுண்டாபுரம் ரோடு, கோல்டன் நகர், வெங்கட்ரமணா நகர், லட்சுமி நாராயணா நகர் மற்றும் நாடார் காலனி பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கோவை மாநகராட்சிக்குட்பட்ட சாரதா மில் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியிலிருந்து நஞ்சுண்டாபுரம் பகுதிக்கு நாடார் காலனி பகுதி வழியாக செல்லும் குடிநீர் குழாய் இணைப்பில் இருந்து தினசரி **1** லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கவும், மேலும், இதற்கு ஏற்படும் செலவினத்தையும், குடிநீர் கட்டணத்தையும் வெள்ளலூர் பேரூராட்சியிடமிருந்து செலுத்த கோரவும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். **8122/2013**/ப.வ (எம்)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 188 நாள் 19.09.2013**

மாநகராட்சி பகுதியில் விநியோகிக்கப்படும் குடிநீர் அளவில் எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண் 38 – செங்காளியப்பன் நகர் க.ச. எண் 333/1 ல் சாலை விஸ்தரிப்பு செய்ய தனியார் நிலம் ஆர்ஜிதம் செய்ய மனையிட உரிமையாளருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல் - தொடர்பாக |
| பார்வை | மனுதாரரின் விண்ணப்பம் நாள் 22.08.2013 |

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 38 விளாங்குறிச்சி கிராமம், செங்காளியப்பன் நகர் பகுதியில் சாலைப்பணி நடைபெற்று வருகிறது.

மேற்படி பகுதியில், க.ச.எண் 333/1 ல் தனியார் நிலம் சாலைப் பகுதியில் வருகிறது. பகுதியின் அளவு 1200.24 ச.அடி ஆகும். மேற்படி பகுதி தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்தால் மட்டுமே சாலையின் அகலம் குறையாமல் போக்குவரத்திற்கு இடையூறில்லாமல் சாலை அமைக்க முடியும். இந்த இடத்தினை மாநகராட்சிக்கு ஒப்படைக்க நில உரிமைதாரர் சம்மதம் தெரிவித்துள்ளார். இந்த இடத்தின் வழிகாட்டி மதிப்பு சதுர அடிக்கு ரூ. 750- ஆகும்.

எனவே, இந்நிலத்தினை தனிப்பட்ட பேச்சுவார்த்தையின் மூலம் கையகம் செய்ய தோராயமாக ரூ. 9.00 இலட்சங்கள் இழப்பீடு அளிக்க வேண்டி உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்யும் மதிப்பினை நில உரிமையாளருக்கு வழங்கி சாலை அமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் செய்யலாம். ந.க.எண்.10136/ 2013/ எம். எச். 3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 189 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளில் **2013–2014** ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த நகர்புற மேம்பட்டு திட்டத்தின் கீழ் **49** சாலை பணிசிப்பங்கள் ரூ**32.83** கோடி மதிப்பீட்டில் **112.37** கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு **04.09.2013** ல் கடிதம் அனுப்பப்பட்டது **.** தற்சமயம் நடைபெற்ற மாநில அளவிலான குழு கூட்டத்தில் **75** சதவீதம் அரசு மானியத்திலும் **25** சதவீதம் மாநகராட்சி பொது நிதியிலிருந்தும் பணிகள் மேற்கொள்ள முடிவு செய்யபட்டுள்ளது**.**

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்**(2013 – 2014 )** கீழ் ரூ**32.83** கோடி மதிப்பீட்டில்

| பணிகள் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபாய் இலட்சத்தில் | |
| வ.எண் | சிப்பம் எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | நீளம் கி.மீ | மதிப்பீட்டுத் தொகை |
| | | | **கிழக்கு மண்டலம்** | | |
| 1 | 1 | 32 | **□ளாங்குறிச்சி பிரதான சாலை பால்காரத்தோட்டம் பஸ் ஸ்டாப் முதல் சிவராம் நகர் வரை மற்றும் ஆசிரியர் காலனி பகுதியில் புதிய தார் தளம் அமைத்தல்.<br>கோ ஆப்ரேடிவ் காலனி (பீளமேடு ஒர்க் இண்டஸ்ட்ரியல்) பகுதியில் புதிய தார் தளம் அமைத்தல்.** | 1.785 | 59.00 |
| 2 | 2 | 32 | **செங்காளியப்பன் நகரில் விள்ரங்குறிச்சி மெயின் ரோடு முதல் கொடிசியா சாலை வரை புதிய தார்தள□ அமைத்தல்.** | 1.385 | 66.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 3 | 32 | வெங்கடாசலபதி நகர் (வி.கே.ரோடு டி.பி.எப் பவுண்டரி முதல் ராஜ நாயுடு நகர் வரை) மற்றும் குமரன் மெயின் ரோடு வீர் டிபார்ட்மெண்ட் முதல் பி.ஆர்.கே கார்டன் வரை புதிய தார் தளம் அமைத்தல்.<br>இன்கம்டேக்ஸ் காலனியில் டெக்ஸ்டூல் நகர் பிரதான சாலை முதல் வி.கே.ரோடு வரை புதிய தார் தளம் அமைத்தல். | 1.866 | 61.50 |
| 4 | 4 | 32 | பல்லவி நகர் மற்றும் சிவானந்தா மில் ரோடு முதல் சரவணம்பட்டி சாலை வரை புதிய தார்தளம் அமைத்தல்.<br>தனலட்சுமி நகரில் புதிய தார்தளம் அமைத்தல். | 2.840 | 74.10 |
| 5 | 5 | 34 | இளங்கோ நகரில் புதிய தார் தளம் அமைத்தல்.<br>திருமுருகன் நகரில் மறு தார்தளம் அமைத்தல். | 3.765 | 68.55 |
| 6 | 6 | 34 & 35 | செந்தூர் திருநகரில் மறு தார் தளம் அமைத்தல்.கோவை திருநகரில் மறு தார்தளம் அமைத்தல். கோல்டுவின்ஸ் இளங்கோ நகரில் மறு தார்தளம் அமைத்தல். | 3.34 | 56.70 |
| 7 | 7 | 35 | விவேகானந்தா பள்ளி சாலையில் புதிய தார் தளம் அமைத்தல்.பி.எல்.எஸ் நகரில் புதிய தார் தளம் அமைத்தல்.<br>பி.எம்.ஆர் லே அவுட் பகுதியில் மறு தார் தளம் அமைத்தல். | 2.930 | 58.20 |
| 8 | 8 | 36 | மதுசூதனன் நகரில் புதிய தார் தளம் அமைத்தல்.பாலாஜி நகரில் மறு தார் தளம் அமைத்தல்.<br>பத்மநாபா நகரில் மறு தார்தளம் அமைத்தல்.தேவி பூரணி நகரில் மறு தார்தளம் அமைத்தல். | 3.496 | 63.65 |
| 9 | 9 | 32 | சிவராம் நகர், இந்து நகர் மற்றும் வி.ஐ.பி நகரில் மறு தார் தளம் அமைத்தல். | 4.47 | 66.00 |
| 10 | 10 | 33 & 34 | வசந்தம் நகர் மற்றும் முத்தையா நகரில் மறு தார் தளம் அமைத்தல்.<br>ஜெ.எஸ்.நகர் மற்றும் இரத்தினகிரி வீதியில் மறு தார்தளம்அமைத்தல்.<br>வீரியம்பாளையம் அருகில் மறு தார்தளம் அமைத்தல். (□ராமசா□ நக□) . | 3.22 | 71.80 |
| | | | மொ□த□ | 29.09 | 645.50 |

**மேற்கு மண்டலம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 11 | 5,6&8 | காந்தி நகர், காளியம்மாள் நகர், ராமசாமி நகர், பெரியண்ணா நகர், மெயின் ரோடு மற்றும் குறுக்கு வீதி 1 சக்தி நகர், மற்றும் சிம்சன் நகரில் அகிய பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 3.87 | 63.5 |
| 12 | 12 | 6 | அப்பாஸ் கார்டன், ராமகிருஷ்ணா நகர் ,வித்யா காலனி, கே.ஆர்கார்டன், இந்திரா நகர், அரவிந்த நகர், அண்னை அமிர்த நகர், லட்சுமி நகர் மற்றும் லட்சுமிபுரம் அகிய பகுதியில் தார்தளம்புதுப்பித்தல் | 3.61 | 66.9 |
| 13 | 13 | 7 & 9 | திருவள்ளுவர் நகர் ரோடு, V.O.C. நகர். மற்றும் நீலியம்மன் நகர் ரோடு, பழனியம்மாள் லே அவுட் மற்றும் M.G.R. காலனிபாரதியார் 2 வீதி கூலி நெசவளர் காலனி, செட்டியார்யம்மா காடு மற்றும் குமரன் கல்யாண மண்டம் சாலை அகிய பகுதியில் தார்தளம்புதுப்பித்தல் | 3.69 | 70.5 |
| 14 | 14 | 16 & 7 | திருவள்ளுவர்நகர், அண்ணா நகர் ரோடு அகிய பகுதியில் தார்தளம்புதுப்பித்தல் | 2.39 | 56.5 |
| 15 | 15 | 14 | நல்லகவுண்டர் நகர் கல்வீரம்பாளையம் ரோடு மற்றும் குரியோ கார்டன் அகிய பகுதியில் தார்தளம்புதுப்பித்தல் | 2.17 | 64 |
| 16 | 16 | 18 & 19 | ஓம்கணேஷ் வேப்பு அவன்யூ, சுண்டப்பாளையம் அலமேலு மங்கை அவன்யூ, பெரிய தோட்டம் காலனி அகிய பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 1.99 | 57 |
| 17 | 17 | 19 | அண்ணா நகர்,ஹவுசிங் யுனிட் ரோடு பொங்காளியூர், பால கணேஷ்சபுரம், தென்றல் நகர் அவன்யூ ஆகிய பகுதியில் தார்தளம்புதுப்பித்தல் | 2.19 | 63 |
| | | | மொ□த□ | 19.91 | 441.40 |

**வடக்கு மண்டலம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18 | 18 | 1& 26 | வார்டு எண்.1க்குட்பட்ட நஞ்சப்ப கவுண்டர் காலனி பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் மற்றும் வார்டு எண்.26க்குட்பட்ட மாசாணியம்மன் நகர் பகுதியில் தார் தளம் புதுப்பித்தல் | 1.670 | 71.20 |
| 19 | 19 | 1 & 3 | வார்டு எண்.1க்குட்பட்ட சேரன் காலனி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.3க்குட்பட்ட ஆசிரியர் காலனி பகுதியில் மறு தார் தளம் அமைத்தல் | 2.235 | 72.50 |
| 20 | 20 | 2 | வார்டு எண்.2க்குட்பட்ட விஷ்வநாதபுரம் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 2.065 | 69.00 |
| 21 | 21 | 2 & 42 | வார்டு எண்.2க்குட்பட்ட சத்தி நகர் மற்றும் பாலஜி நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.42க்குட்பட்ட ஆப்பிள் கம்பெனி அருகில் உள்ள அத்திபாளையம் பிரதான சாலை கிழக்கு பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 1.550 | 63.70 |
| 22 | 22 | 2 & 3 | வார்டு எண்.2க்குட்பட்ட அலங்கார் கார்டன், ஸ்ரீ முரகன் நகர் மற்றும் ஸ்ரீ ராம் கார்டன் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.3க்குட்பட்ட காந்தி நகர் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 2.525 | 67.00 |
| 23 | 23 | 3 | வார்டு எண்.3க்குட்பட்ட மயானம் சாலை, செல்வலட்சுமி கார்டன், மருதம் நகர், அஜந்தா நகர் மற்றும் சாய் ஸ்ரீ நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 1.890 | 53.50 |
| 24 | 24 | 4 | வார்டு எண்.4க்குட்பட்ட அப்பநாயக்கன் பாளையம் மற்றும் அரிஜன காலனி பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 1.770 | 51.60 |
| 25 | 25 | 4 & 28 | வார்டு எண்.4க்குட்பட்ட சௌமியா கார்டன், ராஜுவ் கார்டன், பி.ஆர்.பி.கார்டன், முல்லை நகர் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல், மற்றும் வார்டு எண்.28க்குட்பட்ட பிரதான சாலைக்கு மறுதார் தளம் அமைத்தல் | 2.400 | 73.90 |
| 26 | 26 | 26 | வார்டு எண்.26க்குட்பட்ட சமத்துவபுரம் அணுகுமுறை சாலை, நெஸ்ட் அவென்யூ மற்றும் TNHP பேஸ்-1 பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 2.475 | 75.00 |
| 27 | 27 | 26 | வார்டு எண்.26க்குட்பட்ட TNHP பேஸ்-II பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 3.210 | 74.90 |
| 28 | 28 | 27 | வார்டு எண்.27க்குட்பட்ட அபிராமி நகர், ரங்கா நகர், முருகன் புரம், அம்பிகா நகர், சுந்தரபுரி டவுன் திட்ட சாலை, பாக்கியம் லே அவுட், ஜோதி லே அவுட் மற்றும் சிந்து நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 2.140 | 57.50 |
| 29 | 29 | 27 | வார்டு எண்.27க்குட்பட்ட ரமணீஸ் மயூரி பேஸ்-1 பகுதியில் தார் தளம் அமைத்தல் | 2.141 | 75.00 |
| 30 | 30 | 28 & 29 | வார்டு எண்.28 மற்றும் 29க்குட்பட்ட ராமநாதநகர் மற்றும் எஸ்.பி.எஸ். நகர் பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.29ககுட்பட்ட மடாலயம் சாலை பகுதியில் தார்தளம் அமைத்தல் | 2.570 | 72.25 |
| மொத்தம் | | | | 28.641 | 877.05 |

## தெற்கு மண்டலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **31** | 31 | 87 | குறிஞ்சி நகர் மற்றும் வசந்தம் நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 2.000 | 60.00 |
| **32** | 32 | 88 & 89 | ராஜாஜி நகர்,சொர்ணாம்பிகா லே அவுட், ஜே.ஜே.நகர் மெயின்ரோடு,சுண்டக்காமுத்தூர் பேருந்து நிலையம் முதல் அண்ணா நகர் வரை,மருதம் நகர், என்.டி.பி.வீதி பகுதிகளில் மறு தார்தளம் அமைத்தல் | 2.985 | 72.00 |
| **33** | 33 | 90 & 91 | கோவைபுதூர் ஆர்.பிளாக் மெயின் ரோடு ஸ்ரீநகர், எஸ்.கே.நகர் பகுதிகளில் தார்தளம் அமைத்தல் | 1.580 | 56.00 |
| **34** | 34 | 90 | கோவைபுதூர் 100அடி ரோடு மற்றும் நெ.1 டேங்க் முதல் "Q"பிளாக் வரை தார்தளம் அமைத்தல் | 1.300 | 75.00 |
| **35** | 35 | 90 | சிறுவாணி நகர் தொடர்ச்சி ஆல்பா நகர் முதல் ஐஸ்வர்யா நகர் வரை தார்தளம் அமைத்தல் | 2.200 | 68.00 |
| **36** | 36 | 90 | பரிபூர்ணா எஸ்டேட் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 1.260 | 72.00 |
| **37** | 37 | 91 | K.P.R.காலனி முதல் பாலக்காடு மெயின் ரோடு வரை தார்தளம் அமைத்தல் | 2.000 | 72.00 |
| **38** | 38 | 91 | எஸ்.கே.நகர்,காமாட்சி நகர்,விஷால் எஸ்டேட் முதல் கோகுலம் காலனி பகுதிகளில் தார் தளம் அமைத்தல் | 2.470 | 72.00 |
| **39** | 39 | 92 | பி.கே.புதூர் மெயின் ரோடு மற்றும் பெருமாள்சாமி நகர் மெயின் ரோடுபகுதிகளில் மறு தார்தளம் அமைத்தல் | 1.450 | 60.00 |
| **40** | 40 | 93 | நிர்மல்மாதா பள்ளி ரோடு பகுதியில் மறு தார்தளம் அமைத்தல் | 1.400 | 68.00 |
| **41** | 41 | 93 & 94 | மணிகண்டன் நகர், லட்சுமி நகர், பூங்கா நகர் மற்றும் திரு நகர் பகுதிகளில் மறு தார்தளம் அமைத்தல் | 2.340 | 66.00 |
| **42** | 42 | 94 & 95 | செங்கப்பகோனார் வீதி, வெங்கடாசலபதி நகர் பகுதியில் மறு தார்தளம் அமைத்தல் | 3.120 | 72.00 |
| **43** | 43 | 95 | இட்டேரிவீதி பகுதியில் மறு தார்தளம் அமைத்தல் | 2.000 | 60.00 |
| **44** | 44 | 95 | பாரதி நகர் பகுதியில் மறு தார்தளம் அமைத்தல் | 1.000 | 58.50 |
| **45** | 45 | 96 & 97 | ஆண்டாள்தோட்டம், அறிஞர் அண்ணா காலனி பகுதியில் மறு தார்தளம் அமைத்தல் | 1.560 | 72.00 |
| **46** | 46 | 97 & 98 | ஹவுசிங் யூனிட் பேஸ்–1 மெயின் ரோடு பஞ்சாயத்து ஆபிஸ் மெயின் ரோடு பகுதிகளில் தார்தளம் அமைத்தல் | 1.500 | 75.00 |
| **47** | 47 | 97 & 98 | எல்.ஐ.சி.காலனி குருசாமி பிள்ளை வீதி பகுதியில் மறு தார்தளம் அமைத்தல் | 1.550 | 69.50 |
| **48** | 48 | 98 & 99 | எல்.ஐ.சி.காலனி,அற்புதம் நகர், ராகவேந்திரா கார்டன் பகுதிகளில் தார்தளம் அமைத்தல் | 1.516 | 85.00 |
| **49** | 49 | 100 | ஹவுசிங் யூனிட் பேஸ்–2 பவர்ஹவுஸ் ரோடு முதல் பஸ் ஸ்டேண்டு மெயின் ரோடு மற்றும் குறுக்குச்சாலைகள் வரை தார்தளம் புதுப்பித்தல் | 1.500 | 86.00 |
| | | | மொத்தம் | 34.731 | 1319.00 |

**49** சிப்பந்தகளாக பிரிக்க நிர்வாக அனுமதியும் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.10897/2013/எம்டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 190 நாள் 19.09.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 16.9.2013 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 58 /2013 / எம்டி 2 | வார்டு எண் 80 எம்.என்.ஜி வீதியில் 10 கடைகள் கட்டுதல் பணிக்கு | 28.60 | 06.09.2013 மூன்றாம் அழைப்பு | திரு.ஆர்.செல்வ ராஜ் கோயம்புத்தூர் 4.69 % அதிகம் | திரு.ஆர்.செல்வ ராஜ் கோயம்புத்தூர் 4.69 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-** இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 58/2013 /எம் டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 191 நாள் 19.09.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| சட்டமன்ற உறுப்பினர் நிதி 2011-2012 | | | | | | |
| 1 | 1274/2013 எம் டி5 | வார்டு எண் 60- ஒண்டிபுதூர் தெற்கு மாநகராட்சி ஆரம்ப பள்ளிக்கு உணவு உண்ணும் அறை மற்றும் சுற்றுசுவர் கட்டுதல் | 10.00 | 16.07.-2013 மூன்றாம் அழைப்பு | திருமதி. வி.பாக்யம் கோயம்புத்தூர் 3.27% அதிகம். | திருமதி. வி.பாக்யம் கோயம்புத்தூர் 3.27% அதிகம். |
| 2. | 32/2013/ எம் டி5 | வார்டு எண் 62- நீலிக்கோணம்பாளையம் பிரதான சாலையில் வரதராஜபுரம் மேடு பகுதியில் நூலகம் கட்டுதல் | 10.00 | 16.07.-2013 மூன்றாம் அழைப்பு | திருமதி. வி.பாக்யம் கோயம்புத்தூர் 3.58% அதிகம். | திருமதி. வி.பாக்யம் கோயம்புத்தூர் 3.58% அதிகம். |
| பள்ளிக்கட்டிடம் | | | | | | |
| 3. | 3709/ 2013/ எம்டி5 | வார்டு எண் 21 TNAU வளாகத்தில் உள்ள மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் புதிய சமையல் அறை, உணவறை மற்றும் கழிப்பறை கட்டுதல் பணி | 49.70 | 08.07.2013 இரண்டாம் அழைப்பு | திரு.கே.கோவிந்த ராஜ் கோயம்புத்தூர் 4.86% அதிகம் | திரு.கே.கோவிந்த ராஜ் கோயம்புத்தூர் 4.86% அதிகம் |
| BSUP பணிகள் | | | | | | |
| 4. | 11973 /2012 / எம்டி 5 | வார்டு எண் 86 கரும்புகடை அண்ணா காலனி பகுதியில் பாதாள சாக்கடை குழாய்கள் இணைப்பு பொருத்துதல் | 9.98 | 21.5.2013 நான்காம் அழைப்பு | திருமதி.கே.நபீசா கோயம்புத்தூர் 4.14% அதிகம் | திருமதி.கே.நபீசா கோயம்புத்தூர் 4.14% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | 11583 /2012 / எம்டி 5 | வார்டு எண் 68 சூரியன் வீதி, மணியம் சுப்பிரமணியம் வீதி மற்றும் தம்பியண்ணன் சந்துகளில் பாதாள சாக்கடை குழாய்கள் அமைத்தல் | 6.00 | 21.5.2013 மூன்றாம் அழைப்பு | திரு.ஆர். சுந்தரராஜ் கோயம்புத்தூர் 4.25% அதிகம் | திரு.ஆர். சுந்தரராஜ் கோயம்புத்தூர் 4.25% அதிகம் |
| பொது நிதி | | | | | | |
| 6. | 3968 /2013 / எம்டி 5 | வார்டு எண் 24 உள்ள மேற்கு சம்பந்தம் சாலையில் உள்ள மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல் | 25.40 | 19.07.2013 மூன்றாம் அழைப்பு | 1)தி / வா. என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.53% அதிகம் 2) தி / வா. என்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோயம்புத்தூர் 21.64% அதிகம் | தி / வா. என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.53% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - இப்பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிக்கு மதிப்பீட்டைவிட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1274/2013 எம் டி5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 192 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை – 5, 6 மற்றும் 7-வது வார்டுகளில் சாக்கடைப் பணியாளர்களின் பணிகள் - தனியார் நிறுவனம் மூலம் மேற்கொண்டது 31.07.2013-உடன் முடிவடைதல் - மேற்படி பணிக்காலம் 3 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்வது – மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது – தொடர்பு.

--------------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட 5, 6 மற்றும் 7-வது வார்டுகளில் சாக்கடைப் பணிகளை மேற்கொள்ள தனியார் நிறுவனம் மூலம் (ஸ்ரீனிவாசா இன்ஜினியரிங் ஒர்க்ஸ்) 01.12.2012 முதல் 31.07.2013 வரை ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

மேற்படி ஒப்பந்த காலம் 31.07.2013-டன் முடிவடைந்துள்ளதால் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட 5, 6 மற்றும் 7-வது வார்டுகளில் சாக்கடைப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்த காலத்தை 31.10.2013 வரை காலநீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - அனுமதிக்கலாம் ந.க.எண்: 8805/2013/எம்.டி4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 193 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - திடக்கழிவு மேலாண்மை – 8 மற்றும் 9-வது வார்டுகளில் சாக்கடைப் பணியாளர்களின் பணிகள் - தனியார் நிறுவனம் மூலம் மேற்கொண்டது 31.07.2013-உடன் முடிவடைதல் - மேற்படி பணிக்காலம் 3 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்வது – மாமன்றத்தின் பின்னேற்பு பெறுவது – தொடர்பு.

--------------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட 8 மற்றும் 9-வது வார்டுகளில் சாக்கடைப் பணிகளை மேற்கொள்ள தனியார் நிறுவனம் மூலம் (ஸ்ரீனிவாசா இன்ஜினியரிங் ஒர்க்ஸ்) 01.12.2012 முதல் 31.07.2013 வரை ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

மேற்படி ஒப்பந்த காலம் 31.07.2013-டன் முடிவடைந்துள்ளதால் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட 8 மற்றும் 9-வது வார்டுகளில் சாக்கடைப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்த காலத்தை 31.10.2013 வரை காலநீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 8311/2012/எம்.டி1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 194 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 10

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது சுகாதாரம் - மாநகராட்சி 20 நகர்நல மையங்களில் ஒப்பந்தம் அடிப்படையில் பணிபுரியும் காவலர்கள், ஆயாக்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களின் ஒப்பந்த காலம் நீட்டித்தல் - தொடர்பாக.

--------------------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் செயல்படும் 20 நகர்நல மையங்களில் ஒப்பந்தம் அடிப்படையில் தி/ள். கே.சி.பி இஞ்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் மூலம் பணிபுரியும் காவலர்கள், ஆயாக்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களின் ஒப்பந்த காலம் 01.09.2012 துவங்கி 31.08.2013 அன்று முடிவடைகிறது.

எனவே மாநகராட்சியில் செயல்படும் 20 நகர்நல மையங்களில் ஒப்பந்தம் அடிப்படையில் பணிபுரியும் காவலர்கள், ஆயாக்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களின் ஒப்பந்த காலத்தை 31.10.2013 வரை காலநீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 4866/2012/எம்.டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 195 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 11

பொருள் :- பொது சுகாதாரம் - சிறப்பு தூய்மைக்குழு- ஒப்பந்த பணியாளர்கள் - ஒப்பந்தம் 12.07.2013 –ம் தேதியன்று முடிவடைந்தது – மீண்டும் 13.07.2013 ம் தேதி முதல் 30.11.2013 வரை நீடிப்பது – மற்றும் புதிய ஒப்பந்தம் கோருவது - தொடர்பாக.

*****

மாமன்ற தீர்மான எண். 153, நாள். 30.07.2013-ன் படி இம்மாநகராட்சியில் 100 வார்டுகளிலும் சாலையோரங்களில் உள்ள ஆக்ரமிப்புகளை அகற்றவும் வார்டின் உட்புற பகுதிகளில் அப்புறப்படுத்தாமல் தேங்கியுள்ள குப்பை கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடுகளை அகற்றவும் சிறப்புத் தூய்மைக்குழு பணிக்கு 30 ஒப்பந்த பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் 1 வருட காலத்திற்கு பணி அமர்த்தவும் செலவினம் ரூ 24.50 இலட்சத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டு, 13.07.2012 –ம் தேதி முதல் சிறப்பு தூய்மைக்குழு பணி தொடங்கப்பட்டது. மேலும் இப்பணிக்கு கூடுதலாக ஒப்பந்த பணியாளர்கள் தேவைப்பட்டதால் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ள திரு.மயில்வாணன் ஒப்பந்ததாரர் மூலம் கூடுதலாக 15 ஒப்பந்த பணியாளர்களை பணிக்கமர்த்த உத்தரவிடப்பட்டு தற்போது 45 ஒப்பந்த பணியாளர்கள் தூய்மைப்பணியில் பணிபுரிந்து வருகிறார்கள்.

மேற்படி ஒப்பந்த காலம் 12.07.2013--ம் தேதி முடிவடைந்து விட்டதால் மேலும் ஓராண்டு காலம் ஒப்பந்தம் கோரி பணிக்கு அமர்த்தவும் , ஒரு பணியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 7620 /- என்ற அடிப்படையில் 1 வருட காலத்திற்கு ரூ. 41.15 இலட்சம் செலவினமாகும்.

எனவே, புதிதாக 45 ஒப்பந்த பணியாளர்களை ஒப்பந்தம் கோரி பணிக்கு அமர்த்தவும் மற்றும் இதற்கான செலவினம் ரூ.41.15 இலட்சத்திற்கும் மற்றும் மேற்படி ஒப்பந்தம் கோரி முடிவு செய்யும் வரை மேற்படி 45 ஒப்பந்த பணியாளர்களின் பணியினை 13.07.2013 முதல் 30.11.2013 வரை நீடிக்கவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண். 3570/2013/ எம்.இ.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 196 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

கோயம்புத்தூா் மாநகராட்சி பொறியியல் பிரிவு வடக்கு மண்டலம் வாா்டு எண் 38க்குட்பட்ட கருப்பண்ண மனைப்பிரிவில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான பொது ஒதுக்கீடு இடத்தில் மகளிா் மற்றும் சிறுவா் பூங்கா அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ. 72,30,000- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 2013-14 ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இப்பணிக்கு மாமன்றத்தின் நிா்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - அனுமதிக்கலாம் ந.க.எண்: 9865/2013/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 197 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 13**

கோவை மாநகராட்சிக்குட்பட்ட வெள்ளலூாில் அமைந்துள்ள மாநகராட்சி குப்பைக் கிடங்கின் வடபுறத்தில் சுற்றுச்சுவா் அமைக்கும் பணிக்கு ரூ. 74,25,000- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்ற நிா்வாக அனுமதி மன்றத்திற்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:10843/2012/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 198 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 14**

கோயம்புத்தூா் மாநகராட்சி 2013-14 வரவு செலவு திட்டத்தில், மாநகராட்சிக்குச் சொந்தமான பொது ஒதுக்கீடு இடத்தில் நடைபாதை, சிறுவா் விளையாட்டுத் திடல் மற்றும் புல்வெளிகளுடன் கூடிய பூங்காக்கள், மண்டலத்திற்கு 2 வீதம் அமைக்கவும், அதில் 2 பூங்காக்கள் பிரத்தியேகமாக மகளிா் மற்றும் குழந்தைகளுக்கான பூங்காவாக அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 37 ல் இந்துமாநகா் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி பொது ஒதுக்கீட்டு இடத்தில் ரூ. 75.00 இலட்சம் மதிப்பீட்டில் பிரத்தியேகமாக மகளிா் பூங்காவாக அமைக்கவும், இப்பூங்காவில் மகளிா்க்கான உடற்பயிற்சி சாலை அமைக்கவும், சிறுவா் விளையாட்டு திடல் அமைக்கவும், பூங்காவிற்கு அபிவிருத்திப் பணிகள் செய்யவும் மாமன்றத்தின் நிா்வாக அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - அனுமதிக்கலாம் ந.க.எண்: 9998/2013/எம்.டி4

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 199 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 15**

கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் வாா்டு எண் 20-க்குட்பட்ட கருமலைசெட்டிபாளையத்தில் மாமன்ற உறுப்பினாின் வேண்டுகோளுக்கிணங்க புதிய சமுதாயக்கூடம் கட்டிடம் கட்ட ரூ.51.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் நிா்வாக அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 8967 / 2013 / எம்டி

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 200 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 16

பொருள் - கோயம்புத்தூா் மாநகராட்சி- புதிதாக இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம், பகுதிகளுக்கு குடிநீா் பகிா்மானக் குழாய் அமைத்தல் மற்றும் பில்லுாா் 2வது திட்டம் மற்றும் ஆழியாா் குடிநீா் திட்டத்துடன் குழாய் அமைத்து இணைத்தல் பணிக்கு தமிழ்நாடு குடிநீா் முதலீட்டுக் கழகத்தின் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாா் செய்யவும் அதற்கான தொகை வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டுதல் தொடா்பாக.

கோயம்புத்தூா் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி, வீரகேரளம், குறிச்சி மற்றும் குனியமுத்தூா் பகுதிகளுக்கு குடிநீா் பகிா்மானக் குழாய் அமைத்தல் மற்றும் பில்லுாா் 2வது குடிநீா் திட்டத்தை ஆழியாறு திட்டத்துடன் குழாய் அமைத்து இணைத்தல் ஆகிய பணிகள் மேற்க்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயாா் செய்ய விருப்பு கேட்பு அறிக்கை வரவேற்கவும், ஆலோசகா் நியமனம் செய்யவும் அதற்கான தொகை வழங்கவும் மாமன்ற தீா்மான எண் - 330 நாள்31.01.13 அன்று அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி ஆலோசகா்களை நியமனம் செய்ய 22.07.2013ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் தி/ள். பிக்ஸ்சனா் கன்சல்டிங் இன்ஜீனியா், சென்னை மற்றும் தி/ள்.டாடா கன்சல்டிங் இன்ஜீனியா், பெங்களூா் ஆகிய இரண்டு நிறுவனங்கள் தொழில்நுட்ப தகுதி பெற்றிருந்ததால் 05.10.2013 அன்று விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. இவ்விரண்டு நிறுவனங்களில் தி/ள்.டாடா கன்சல்டிங் இன்ஜீனியா், பெங்களுா் அவா்கள் குறைவான விலை விகிதம் குறிப்பிட்டிருந்தனா்.

மேலும் தி/ள்.டாடா கன்சல்டிங் இன்ஜீனியா், பெங்களூா அவா்களிடம் விலைகுறைத்து கொடுக்க 17.08.2013 அன்று ஆணையா் அனுமதி பெற்று கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி தி/ள்.டாடா கன்சல்டிங் இன்ஜீனியா், பெங்களுா் நிறுவனத்தினா் விலைக்குறைப்பு செய்து சம்மத கடிதம் சமா்ப்பிக்கவில்லை. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யவும், இப்பணி குடிநீா்ப்பணியாக இருப்பதாலும் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும் கால தாமதத்தை தவிா்க்கவும், தமிழ்நாடு குடிநீா் முதலீட்டு கழகத்தின் மூலம் ஐந்து சிப்பங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாா் செய்யவும், அதற்கான தொகை செலுத்தவும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. திருவாளா்கள் டாடா கன்சல்டிங் இன்ஜினியா்ஸ் அவா்களது ஒப்பந்தப் புள்ளியை மாமன்றம் ரத்து செய்ய அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி திட்ட அறிக்கை தயாரிப்பு பணி தமிழ்நாடு குடிநீா் முதலீட்டுக் கழகத்திற்கு வழங்கவும்,அதற்கான கட்டண தொகையை செலுத்தவும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

ந.க. எண். 648/13/MD1

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 201 நாள் 19.09.2013</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 17

கோயம்புத்தூா் மாநகராட்சியில் ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்ட பணி ரூ. 6893.11 லட்சம் மதிப்பீட்டில் தனியாா் (Public Private Partnership Mode) பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தினால் தினசரி கூடுதலாக சேகரமாகும் திடக்கழிவினை சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் கழிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளதனை கருத்தில் கொண்டு 500.00 மெட்ரிக் டன் எடை கொள்ளளவிலான குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் (Waste-to-Energy Plant) அமைப்பினை வெள்ளலூா் குப்பைக்கிடங்கு அமைந்துள்ள இடத்திலோ அல்லது வேறு ஏதேனும் ஒரு தகுதி வாய்ந்த இடத்திலோ தனியாா் (Public Private Partnership Mode) பங்களிப்புடன் நிறுவி செயல்படுத்த மாமன்றம் தனது தீா்மான எண் 420, நாள் 18.03.2013-ல் அனுமதி அளித்துள்ளது. அதன்பேரில் திட்ட அறிக்கை தயாரிக்க கடந்த 12.08.2013-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது, அதில் கீழ்க்கண்ட ஐந்து நிறுவனங்கள் பங்கேற்றன.

1) தி/ள். லூயிஸ் ப்ா்ஜா் குருப், மும்பை
2) தி/ள். இன்ப்ராஎன் கன்சல்டன்சி பிரைவேட் லிமிடெட், பெங்களுரு
3) தி/ள். செனஸ் இந்தியா கன்சல்டன்சி பிரைவேட் லிமிடெட், நொய்டா
4) தி/ள். டான்டன் அா்பன் சொலூசன். மும்பை
5) தி/ள். தாராசா அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட், மும்பை

மேற்கண்ட நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப பிரேரனையை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு கடந்த 30-08-2013 அன்று கூடி விவாதித்ததில் இரண்டு நிறுவனங்கள் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும் அவா்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகளை திறக்கலாமென பரிந்துரை செய்ததற்கு ஆணையா் 30-08-2013ல் அனுமதி வழங்கியுள்ளாா். இதனைத் தொடா்ந்து அவா்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறை 04-09-2013 அன்று திறக்கப்பட்டதில் மேற்படி நிறுவனங்கள் வழங்கிய விலைப்புள்ளி விபரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | திட்ட அறிக்கை தயாரிப்பு (ரூபாயில்) | திட்ட மேலாண்மை மேற்பார்வை தொகை (மாதந்தோறும்) |
|---|---|---|---|
| 1 | தி/ள். லூயிஸ் பர்ஜர் குருப், மும்பை | 68,00,000.00 | 7,00,000.00 |
| 2 | தி/ள். இன்ப்ராஎன் கன்சல்டன்சி பிரைவேட் லிமிடெட், பெங்களுரு | 16,60,000.00 | 6,71,000.00 |

இவ்விலைப்புள்ளி திறனாய்வு குழு 06-09-2013 அன்று ஆய்வு செய்ததில் குறைவாக கொடுத்த தி/ள். இன்ப்ராஎன் கன்சல்டன்சி பிரைவேட் லிமிடெட், பெங்களுரு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாமென பரிந்துரை செய்துள்ளது.

எனவே, திட்ட அறிக்கை தயாரிக்க மேற்படி நிறுவனத்திற்கு அனுமதி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்:10843/2012/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 202 நாள் 19.09.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 18

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி - தொழில்வரி உயர்வு செய்தல் - தொடர்பாக.

**பார்வை:**
1. அரசு ஆணை (MS ) எண். 11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.01.1999.
2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் எண்.38714/2008/R1 நாள் 13.08.2008.
3. மாமன்ற தீர்மானம் எண்.332 நாள். 29.01.2009.
4. மாமன்ற தீர்மானம் எண்.243 நாள். 27.02.2012.

--------

பார்வை 1-ல் காணும் அரசு ஆணை மற்றும் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தொழில்வரி) விதிகள் 1999, விதி 16-ன்படி, 1.10.1998 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி 25% முதல் 35% வரை உயர்வு செய்து மன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என உள்ளது.

இதன்படி, கோவை மாநகராட்சியில் 01.10.2003ல் தொழில்வரி உயர்வு செய்யப்பட்டது. 01.10.2008 முதல் உயர்வு செய்யப்பட்டிருக்க வேண்டிய தொழில்வரி விகிதம் கீழ்க்கண்டவாறு 01.04.2009 முதல் உயர்வு செய்யப்பட்டு திருத்திய தொழில்வரி வசூலிக்கப்பட்டு வந்தது.

| வரிசை எண் | அரையாண்டு சராசரி வருமானம் | தொழில் வரி |
|---|---|---|
| 1 | ரூ. 21,000 வரை | இல்லை |
| 2 | ரூ. 21,001 முதல் 30,000 வரை | ரூ.94/- |
| 3 | ரூ. 30,001 முதல் 45,000 வரை | ரூ.235/- |
| 4 | ரூ. 45,001 முதல் 60,000 வரை | ரூ.469/- |
| 5 | ரூ. 60,001 முதல் 75,000 வரை | ரூ.704/- |
| 6 | ரூ. 75,000-க்கு மேல் | ரூ.938/- |

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் 24.10.2011 முதல் இணைக்கப்பட்டுள்ள 11 உள்ளாட்சி அமைப்புகளிலும் ஏற்கெனவே நடைமுறையில் இருந்த விகிதத்தில் வெவ்வேறு விகிதங்களில் தொழில்வரி விதிப்பு செய்யப்பட்டு வந்தது. இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகளில் 01.10.2008 முதல் உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்ட தொழில்வரி விகிதம் மாநகராட்சியில் உள்ள தொழில்வரி விகிதத்திலிருந்து சற்று மாறுபட்டு இருந்ததால் ஒருங்கிணைந்த கோயம்புத்தூர் மாநகராட்சி முழுமைக்குமாக 01.04.2012 முதல் கீழ்க்கண்டவாறு ஒரே விகிதத்தில் மாமன்ற தீர்மானம் எண்.243 நாள். 27.02.2012ன்படி, தொழில்வரி விதிக்கப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | அரையாண்டு சராசரி வருமானம் | தொழில் வரி |
|---|---|---|
| 1 | ரூ. 21,000 வரை | இல்லை |
| 2 | ரூ. 21,001 முதல் 30,000 வரை | ரூ.98/- |
| 3 | ரூ. 30,001 முதல் 45,000 வரை | ரூ.244/- |
| 4 | ரூ. 45,001 முதல் 60,000 வரை | ரூ.488/- |
| 5 | ரூ. 60,001 முதல் 75,000 வரை | ரூ.731/- |
| 6 | ரூ. 75,000-க்கு மேல் | ரூ.975/- |

அரசு ஆணையின்படி, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி உயர்வு செய்யப்பட வேண்டும். அதன்படி, கோவை மாநகராட்சியில் 01.10.2013 முதல் தொழில்வரி தற்போதைய விகிதத்திலிருந்து குறைந்தபட்சமாக 25 சதவீதம் உயர்ந்தபட்சமாக 35 சதவீதம் உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

**01.10.2013 முதல் உயர்வு செய்வதால் ஏற்படும் புதிய தொழில்வரி விகிதம்**

| வ. எண் | அரையாண்டு சராசரி வருமானம் | தொழில் வரி (ரூ.) | | | |
|---|---|---|---|---|---|
| | | தற்போது உள்ளது | 25% உயர்வு | 30% உயர்வு | 35% உயர்வு |
| 1 | ரூ. 21,000 வரை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | ரூ. 21,001 முதல் 30,000 வரை | ரூ.98/- | ரூ.123/- | ரூ.127/- | ரூ.132/- |
| 3 | ரூ. 30,001 முதல் 45,000 வரை | ரூ.244/- | ரூ.305/- | ரூ.317/- | ரூ.329/- |
| 4 | ரூ. 45,001 முதல் 60,000 வரை | ரூ.488/- | ரூ.610/- | ரூ.634/- | ரூ.659/- |
| 5 | ரூ. 60,001 முதல் 75,000 வரை | ரூ.731/- | ரூ.914/- | ரூ.950/- | ரூ.987/- |
| 6 | ரூ. 75,000-க்கு மேல் | ரூ.975/- | ரூ.1219/- | ரூ.1268/- | ரூ.1316/- |

எனவே, மேற்படி தற்போது நடைமுறையிலுள்ள வரிவிகிதங்களிலிருந்து குறைந்தபட்சம் 25% முதல் அதிகபட்சம் 35% வரை உயர்வு செய்வது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண். 9601/2010/எம்.ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 203 நாள் 19.09.2013**

தற்போது நடைமுறையில் உள்ள தொழில் வரியை 30% உயர்வு செய்து 01.04.2014 முதல் வசூலிக்க ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை, விருப்ப கேட்பு அறிக்கை பொது நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்க்கண்ட பணிகளுக்கு விருப்ப கேட்பு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. மாமன்ற தீர்மான எண் 20 நாள் 25.04.2013 ன்படி தி/ள் எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் நிறுவனத்திற்கு பணிகளை மேற்கொள்ள 26.04.2013 ல் ஒப்பந்த பத்திரம் சமர்பிக்க அறிக்கை வழங்கப்பட்டது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் ஆலோசனை கட்டணம் சதவிகிதத்தில் |
|---|---|---|---|
| 1 | 8314/12/எம்.டி4 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வடிவமைத்தல் | தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 0.90% |
| 2 | 8314/12/ எம்.டி4 | காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம் வடிவமைத்தல் | தி/ள். எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் கோயம்புத்தூர் மதிப்பீட்டில் 0.85% |

திரு/ள் எஸ்.பி.எஸ் அசோசியட்ஸ் நிறுவனத்தினர் மேற்படி பணிகளை தற்சமயம் தங்களால் செய்ய இயலாது என தெரிவித்துள்ளனர். எனவே சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கையினை ரத்து செய்யவும் மீண்டும் மேற்படி இனங்களுக்கு விருப்ப கேட்பு அறிக்கை கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : – அனுமதிக்கலாம். ந.க.எண். 8314/12/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 204 நாள் 19.09.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 20**

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – 6 நகர்நல மையங்களில் செயல்பட்டு வரும் என்.சி.டி. மையங்களுக்குத் தேவையான மருந்துப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கி வழங்குதல் - தொடர்பாக.

-------------------

30 வயதிற்கு மேற்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சர்க்கரை நோய், இரத்த உயர் அழுத்தம், கர்ப்பபை வாய் புற்றுநோய், மற்றும் மார்பக புற்றுநோய் ஆகிய நோய்களைக்கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்க தொற்றாநோய் கண்டறிதல் என்னும் புதிய திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டம் கோயம்புத்தூர் மாநகராட்சியிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்காக அரசு சில உபகரணங்களை வழங்கி உள்ளது. ஆனால் நோயாளிகளுக்கு இந்த பரிசோதனைகள் செய்ய இரசாயனங்கள் தேவைப்படுகிறது. இது தொடர்பாக அரசு சிறப்பு செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மற்றும் திட்ட இயக்குநர் , தேசிய சுகாதாரத்திட்டம், சென்னை அவர்களின் கடிதத்தில் பரிசோதனைக்குத் தேவையான இரசாயனங்கள் மற்றும் உபகரணங்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கு ஏற்படும் செலவினங்கள் அரசிடமிருந்து மீளப்பெறப்படுமா என்பது குறித்து அரசு சிறப்பு செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை மற்றும் திட்ட இயக்குநர் , தமிழ்நாடு சுகாதாரத்திட்டம், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் பொது சுகாதாரத்தின் அவசியம் கருதியும், அரசின் திட்டத்தினை இம்மாநகராட்சியில் சிறப்பாக செயல்படுத்தவும் நமது மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 6 தொற்றாநோய் சிகிச்சை மையங்களுக்கு தேவையான பொருட்கள் வாங்க ஏற்படும் ஆரம்ப செலவினம் ரூபாய் 8.05 லட்சத்திற்கும் மற்றும் மாதாமாதம் ஏற்படும் தொடர் செலவினங்கள் ரூபாய் 5.50 லட்சத்திற்கும் அரசிடமிருந்து மறு உத்தரவு வரும்வரை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 5103/2013/எம்.இ4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 205 நாள் 19.09.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 21**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பல பகுதிகளில் கட்டிட இடமான பொருட்களை அப்புறப்படுத்தவும், அப்பொருட்களை கொண்டு கட்டுமான உபயோக பொருட்களாக மாற்ற தனியார் பங்களிப்புடன் உக்கடம் கழிவுநீர் பண்ணை இடத்தில் இத்திட்டம் நிறைவேற்ற முன்மொழிவு கோரும் அறிவிப்பு கோர (Request for proposal) மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 4467/2013/எம்.எச். 5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 206 நாள் 19.09.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 22**

கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அலுவலக ஆய்வு பணிக்கென கடந்த 2004 ம் வருடம் வாங்கப்பட்ட அலுவலக ஆய்வு வாகன எண் TN37-AH9181, அம்பாசிடர் கார், வாங்கப்பட்டு 2010 வரை அலுவலக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் கடந்த 2010ம் ஆண்டு ஆணையாளர் அலுவலக பயன்பாட்டிற்காக TN66-B3646 ஸ்கார்ப்பியோ ஈப்பு வாங்கப்பட்டதால் TN37-AH9181 வாகனம் துணை ஆணையாளர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்பொழுது இந்த வாகனம் பயன்படுத்த இயலாத காரணத்தினால் வேறு வாகனம் துணை ஆணையாளர் அவர்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் மாநகராட்சி துணை ஆணையாளர் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அலுவலக ஆய்வு வாகனம் TN37-AH9181 அம்பாசிடர் கார் கடந்த 2004 அன்று வாங்கப்பட்டு சுமார் 13 வருடங்களுக்கு மேல் ஆகி விட்டதாலும் சுமார் 2,45,000 கிலோ மீட்டருக்கு மேல் பயன்படுத்தப்பட்ட காரணத்தினாலும், மேலும் அரசாணை (நிலை) எண்.983 உள்துறை (போக்குவரத்து-VI) ன் படி பெட்ரோல் இயக்கூர்திகளின் வயது 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருந்தாலோ அல்லது 2.0 லட்சம் கி.மீ தூரம் ஓடியிருந்தாலோ இதில் எது பின் தேதியில் அமைகிறதோ அந்த தேதியில் மேற்படி வாகனத்தினை கழிவு செய்யலாமென ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாகனம் ஆய்வுக்கு செல்லும் பொழுது அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதனால் ஆணையாளரின் ஆய்வு வாகனம் TN66-B3646 ஸ்கார்ப்பியோ ஈப்பு துணை ஆணையாளர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யவும், மேற்கூறிய வாகனத்திற்கு பதிலாக ஆணையாளர் அவர்களுக்கு ஓர் புதிய இன்னோவா வாகனம் வாங்கப்பட்டபின் பழைய வாகன எண் TN37-AH9181, அம்பாசிடர் காரை கழிவு செய்யலாம்.

எனவே ஆணையாளர் அவர்களின் ஆய்வுப் பணிக்கென ஓர் புதிய இன்னோவா வாகனம் வாங்க ரூ.18,00,000/- செலவினத்தில், DGS&D விலை விகிதத்திலோ அல்லது அரசு நிறுவனங்களுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள சிறப்பு விலை விகிதத்திலோ வாங்குவதற்கும், வாங்கியபின் கழிவு செய்த பின்னர் பின்னேற்பு பெறவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 8968 / 2013 / எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 207 நாள் 19.09.2013**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 23

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – சொக்கம்புதூரில் உள்ள மின் மயானத்தினை காய்கறிச் சந்தை மற்றும் உணவகங்களில் உருவாகும் உணவு கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரித்து இயக்குதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு அரசின் அனுமதி பெறுவதற்கு பிரேரனை சமர்ப்பித்தல் - தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சொக்கம்புதூரில் உள்ள மின் மயானத்திற்கு அதிகளவில் மின்சாரம் தேவைப்படுகிறது. இதற்கு அப்பகுதியில் உள்ள காய்கறி சந்தையின் உருவாகும் காய்கறிக் கழிவுகள் மற்றும் பழக்கழிவுகளிலிருந்தும், உணவகங்களில் இருந்து சேகரமாகும் உணவுக் கழிவுகளிலிருந்தும் மின்சாரம் தயாரிப்பதற்கு ரூ. 95,00,000- ற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு உரிய அரசு உத்திரவு தேவைப்படுகிறது. எனவே, அதற்குரிய பிரேரனைகள் அரசுக்கு அனுப்பி வைக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - காய்கறி மற்றும் உணவுக் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான மதிப்பீடு தொகை ரூ. 95,00,000- ற்கு அரசிடமிருந்து அனுமதி பெறுவதற்கான பிரேரனை அரசுக்கு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 8969/13/ ஜே.என். 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 208 நாள் 19.09.2013**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி